மர்களை மாற்றி எந்த எந்த இடங்களில் அதிகமாகக் கொடுக்கமுடியுமோ அந்த அந்த இடங்களிலே எல்லாம் அதிகமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி.இராமன்: தலைவர் அவர்களே, மெஞ்ஞானபுரத்தைப் பொறுத்தவரையில் அப்படி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 30 அப்ளிகேஷன்கள் கொடுக்கப்பட்டு அவற்றிலே 7 இடத்திற்கு இப்பொழுது கொடுத்திருக்கிறோம்; இன்னும் 14 இடத்திற்கு கொடுக்காமல் இருப்பதற்குக்காரணம் நாட்பீஸிபிள் ஆக இருப்பதால்தான். இன்னும் சில அப்ளிகேஷன்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கனம் உறுப்பினர் கூறுகிற தகவல் என்னிடத்திலே இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்துக்கு மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள்

*** 268 வினா—திரு. டி. மார்டின்:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரம சிங்கபுரத்திலும் தொழிலாளர் இன்சூரன்ஸ் ஆஸ்பத்திரிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்படும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) (இ) காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் அகப்பிணி மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும், விக்கிரமசிங்கபுரத்திலும் மாநிலத் தொழிலாளர் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் இருந்தன. தொழிலாளர் அரசுக் காப்புறுதி நிறுவனம் நிதி நிலையை மறு பரிசீலனை செய்த பின்னர், போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களுக்காகவும், புதிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ள இயலாதென 1968-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் அரசுக்குத் தெரிவித்தது. எனவே தற்சமயம் இந்த இரண்டு இடங்களிலும் தொழிலாளர் அரசுக் காப்புறுதி மருத்துவ மனைகள் கட்டுவதற்கு இயலாது.

ஆனால் மேற்கண்ட மருந்தகங்கள் மாநில அரசுக்குரிய கட்டடங்களில் நடந்துவருகின்றன.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுடன் இன்னும் அதிகமாக நம்முடைய மாநில அரசு போராடா விட்டாலும் நியாயமாக அடிக்கடி கேட்டு அம்பாசமுத்திரத்திலும், தூத்துக்குடியிலும் மருத்துவ மனைகளை மத்திய அரசின் உதவியில் நல்லமுறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1970 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: கனம் உறுப்பினர் அவர்களைவிட அதிகமான கவலேயோடு இதிலே இந்த அரசு செயலாற்றி வருகிறது. அண்மையிலே திரு. ஜகஜ்வன்ராம் அவர்கள் இங்கு வந்திருந்த பொழுதுகூட தனியாக எழுத்துமூலமாக ஒரு வேண்டுகோளை நானே சந்தித்துக் கொடுத்திருக்கிறேன். மீண்டும், மீண்டும் மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அதேமாதிரி இ. எஸ். ஐ. கார்ப்பரேஷனுக்கும் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. முதலமைச்சரின் விளக்க உரை.

முதலமைச்சருடைய கார் டிரைவருக்கு [redacted]கூவம் ஆற்றோரத்தில் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்ட குற்றச் சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதி 82-ன்படி ஒரு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சித்தன் அவர்கள் என்மீது ஒரு குற்றச்சாட்டைக் கொண்டு வந்து அது சம்பந்தமாக நடைபெற்ற விவாதங்கள் துணைப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பின்படி சட்டப்பேரவை நடவடிக்கைப் புத்தகங்களிலே இன்று காலே 9 மணி வரையிலே இடம்பெறத் தேவையில்லை என்றும், இதைத்தவிரப் பத்திரிகைகளில் அவற்றை வெளியிடத் தேவையில்லை என்றும், அதற்குள்ளாக ஆதாரங்களை திரு. சித்தன் அவர்கள் கொடுக்கக்கூடும் என்றும் தீர்ப்பளித்தார்கள். அவர்கள் ஆதாரங்களைக் கொடுத்தாலும்சரி, கொடுக்காவிட்டாலும் கவலேயில்லை. நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தினுடைய நடவடிக்கைக் குறிப்புகளை மீண்டும் நடவடிக்கை புத்தகத்தில் ஏற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அறிக்கைகை நான் அவைமுன்னர் வைக்கிறேன்.

நேற்று, 6-3-70, சட்டசபையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நிதிநிலே அறிக்கை விவாதத்தின்போது பேசுகிற சமயத்தில் என்னுடைய கார் டிரைவருக்கு, கூவம் நதிக்கரை ஓரத்தில் ஒரு ஏக்கர் அரசாங்கப் புறம்போக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார். நான் உடனே குறுக்கிட்டு, ஒரு ஏக்கர் நிலம் என்னுடைய கார் டிரைவருக்கு விலேக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டு, அதற்கு விவரங்களைச் சொல்ல வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களை